புதுமைப்பெண் திட்டம் – தமிழ்ப் புதல்வன் – காலை உணவுத் திட்டம் என

மீண்டும் முதல்வராக முதல்வரின் கல்வித் திட்டங்களே போதும்!

நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் அறிக்கை!

சென்னை, பிப். 27 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மாபெரும் சாதனையாக மாணவச் செல்வங்களுக்கு புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், காலை உணவுத் திட்டம் என அளப்பரிய திட்டங்கள் மூலம் முதல்வர் அவர்கள் மீண்டும் அரியணையில் அமர இத்தகைய கல்வித் திட்டங்களே போதும் என நமது திராவிட இயக்கத்தின் நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

பெண்ணே நீ சாதிக்க பிறந்தாய், நீ படிக்க வேண்டும். படிப்பு உன் வாழ்க்கை முன்னேற்ற வழிகாட்டி. இந்த விலைமதிப்பில்லா சொத்தை தந்தை பாசத்தோடு 'புதுமைப்பெண்' திட்டத்தை நான் உனக்கு அளிக்கிறேன்.

இந்த கல்வி போதுமென்று வறுமையால் வாடாமல் உயர் கல்வி படிப்புக்கு உன் வங்கிக் கணக்கில் மாதம் ஆயிரம் ரூபாய் அளித்த கொடை வள்ளலே நீர் அல்லவா கல்விக் கண்ணைத் திறந்த தெய்வம் உன் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி என்று எண்ணி அளித்த திட்டம்.

மாணவர்களே நாளைய சமுதாயம் நீதான் என்று மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து படிக்க ஊக்கவித்த கல்வி உன்னை நல்வழிப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருக்க வேண்டும் என்று 'தமிழ் புதல்வன்' என்ற திட்டம் நம் முதலமைச்சர் கொடுத்துள்ளார். தமிழ்நாட்டில் ஏழை குழந்தைகள் சந்தோஷமாக பள்ளிக்கு வர வேண்டும் என்று 'காலை உணவு' திட்டத்தை கொடுத்து பசி அறியா குழந்தைகளை முகத்தில் சிரிப்பை கண்டு சந்தோசப்படும் எங்கள் முதல்வரே 2026 தேர்தல் இமாலய வெற்றி உங்களுக்கு கொடுத்து மீண்டும் நீங்கள் முதல்வராக அரியணையில் அமர நீங்கள் கொடுத்த கல்வி திட்டங்களே ஆகும்.

இவ்வாறு திருமதி. ஓவியம் தெரிவித்துள்ளார்.

கோவை 73வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.சந்தோஷின் 8 வயது மகள்

வெண்பா மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவால் மரணம்!

7 பேருக்கு மறுவாழ்வு!

கோவை, பிப். 27 - கோவை 73வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.சந்தோஷ் மகள் வெண்பா (வயது 8) மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவால் மரணம் அடைந்தார், அவர் 7 பேருக்கு மறுவாழ்வு அளித்தார்.

கோவை மாவட்டம், 73வது வார்டு மாமன்ற உறுப்பினர், நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு தலைவர் டி.சந்தோஷ் - சுகன்யா ஆகியோரின் மகள் வெண்பா (வயது 8) இவர் கடந்த 23.02.2026 தேதி அன்று இரத்த அழுத்தம் அதிகமாகி மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு சுயநினை விழுந்தார் உடனடியாக அவர் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது.

இந்த நிலையில் 25.02.2026-ஆம் தேதி அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டது, அதனைத் தொடர்ந்து அவரது பெற்றோர்கள் டி.சந்தோஷ் - சுகன்யா ஆகியோர் மகள் வெண்பா உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தார்கள். தமிழ்நாடு உறுப்பு தான ஆணையத்தின் அனுமதியுடன் அவரது கல்லீரல், சிறுநீரகங்கள், கண்கள், எலும்பு மற்றும் தோல் ஆகியவை தானமாக பெறப்பட்டது. கல்லீரல் மற்றும் ஒரு சிறுநீரகம், கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைக்கும், ஒரு சிறுநீரகம், கண்கள், எலும்பு மற்றும் தோல் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும், வழங்கப்பட்டது.

கே.எம்.சி.ஹெச் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் உறுப்புகளை மற்ற நோயாளிகளுக்கு பொருத்துவதற்கு தகுந்த நேரத்தில் மிகவும் திறம்பட செயல்பட்டு உறுப்புகளை அனுப்பிவைத்தனர்.

இது குறித்து கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை தலைவர் டாக்டர்.நல்லா ஜி பழனிசாமி அவர்கள் கூறுகையில், மக்களிடையே உடல் உறுப்பு தானம் குறித்து அதிக விழிப்புணர்வு தேவைப்படுகிறது. ஒருவர் இறந்த பிறகு அவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டால் அது பலரது உயிரைக் காப்பாற்ற உதவும். பின்னர் உடல் உறுப்பு தானம் வழங்கிய செல்வி. வெண்பா குடும்பத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

செங்கொடி சுமந்த சிங்கம் – மறைந்த

தோழர் நல்லகண்ணுக்கு செவ்வணக்கம்!

கவிப்பேரரசு வைரமுத்து இரங்கல்!



தோழர் நல்லகண்ணு
மறைந்துவிட்டார்

சிவப்புக் கட்சியின்
கறுப்பு காந்தி இறந்துவிட்டார்

எழுந்தாலும் விழுந்தாலும்
கடலின் புகழ்பாடும் அலைபோல,
கம்யூனிஸ்ட் கட்சியின்
ஏற்றத்திலும் இறக்கத்திலும்
செங்கொடி சுமந்த
சிங்கம் அவர்

கம்யூனிஸ்ட் அல்லாதவர்களும்
கம்யூனிஸ்ட் கட்சியின்மீது
கொண்டிருக்கும் மதிப்புக்கு
நல்லகண்ணுவின்
வாழ்க்கைமுறை ஒரு காரணம்

சுதந்திர இந்தியாவில்
தடைசெய்யப்பட்ட
கம்யூனிஸ்ட் கட்சி
இன்றுவரை
உயிர்ப்போடு இருப்பதற்கு
நல்லகண்ணு போன்றோரின்
தியாகமே காரணம்

செயற்கை நுண்ணறிவு
எதிர்காலத்தில்
இறந்தவர்களை மீட்டுருவாக்கும்
தொழில்நுட்பம் கண்டறிந்தால்
நல்லகண்ணுவின் மீட்பையே
நாடு கேட்கும்

அவர் வாழ்ந்தது
ஒரு நூறாண்டு;
அவரை மறக்காது
இந்த நூற்றாண்டு

அவருக்கு
என் செவ்வணக்கம்

கவிப்பேரரசு
வைரமுத்து

தி.மு.க. மாநில தொண்டரணி நிர்வாகிகள் கூட்டம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை மாவட்டந்தோறும் நலத்திட்டங்கள் வழங்கிக் கொண்டாடுவோம்!

கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்!

சென்னை, பிப். 27 - தி.மு.க. தொண்டர் அணி மாநில நிருவாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (24.02.2026) காலை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அணித் தலைவர் ஜி.சுகுமாரன் தலைமை வகித்தார். அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர், துணைச் செயலாளர் எஸ்.எம்.கே. அண்ணாதுரை, பயிற்சியாளர் குருதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தேர்தலை காரணமாக வைத்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தையே முடக்குவதற்கான ஒன்றிய பா.ஜ.க. அடிமை அ.தி.மு.க.வின் சூழ்ச்சிகளை முறியடித்து, "நீ ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால், நான் என் மக்களுக்கு ரூபாய் ஐந்தாயிரமாக தருவேன்" என சூளுரைத்து பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான தொகையினை முன்பணமாக ரூ. 3000/- கோடைக் கால சிறப்புத் தொகுப்பு ரூ. 2,000/- என மொத்தம் ரூ. 5000/-த்தினை தமிழ் நாட்டு பெண்களுக்கு வழங்கிய திராவிட மாடல் அரசின் சாதனை நாயகர், கருணைமிகு கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியினை இக் கூட்டம் தெரிவித்து மகிழ்கிறது.

மார்ச்சு 1 இல், 73ஆவது அகவை காணும் நமது கழகத் தலைவர், தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை யொட்டி, கழகத் தொண்டர் அணி சார்பில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வார்டுகளின் கழக இரு வண்ண கொடி யேற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாட வேண்டும். மேலும், பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கி நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்.

வலுவான தொண்டர் அணியை மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அமைப்பாளர்கள் 18 வயது முதல் 40 வயதுடையவர்களை குறைந்த பட்சம் 25 நபர்களை தொண்டர் அணியில் சேர்த்திட வேண்டும். அவர்களுக்கு உடல்நலன் பேணும் பயிற்சியும் அணி வகுப்பு பயிற்சியும் அளித்திட வேண்டும். பயிற்சி பெற்ற தொண்டர் அணியினருக்கு அடையாள அட்டை வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.

தேர்தல் பிரச்சார சுற்று பயணத்தில் பயணிக்கும் கழகத் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உள்ளிட்ட கழக முன்னணியினருக்கு அந்தந்த மாவட்ட அமைப்பாளர்கள் தொண்டர் அணியினரை ஒருங்கிணைத்து முழுசீர் உடை அணிந்து பாதுகாப்பு நல்கிட வேண்டும். இதற்கு மாவட்டச் செயலாளர்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து துரோகம் செய்து வரும் மதவாத கலக அரசியல் நடத்தும் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்த பாசிச பா.ஜ.க. அரசுக்கு இக்கூட்டம் தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழக சார்பில்

தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

அலிசேக் மீரான் சிறப்புரை! பி.கிருஷ்ணன் தலைமை!

மும்பை, பிப்.27 – மும்பை புறநகர் மாநில தி.மு.கழகம் சார்பில் தமிழ்நாடு முதல்வரும் தி.மு.கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா வருகின்ற 01-03-2026 ஞாயிறு அன்று மாலை சரியாக 6:00 மணியளவில் டோம்பிவிலி மேற்கில் உள்ள ஜோந்த்லே மேனிலைப் பள்ளியில் வைத்து நடைபெற உள்ளது.

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிஷேக் மீரான் சிறப்புரையாற்றுகிறார்.

பொறுப்புக்குழு உறுப்பினர் பி.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்புக் குழு உறுப்பினர் வீரை சோ பாபு வரவேற்புரை ஆற்ற முனைவர் வதிலை பிரதாபன் துவக்க உரையாற்றுகிறார்.

நிகழ்வினை திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி அமைப்பாளர் ந. வசந்தகுமார் தொகுத்து வழங்குகிறார்.

பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது நலத்திட்ட உதவிகளை பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ஜேம்ஸ் தேவதாசன், வெ.அ. ஜைனுலா புதீன் மற்றும் சிவக் குமார் சுந்தர்ராஜ் ஆகியோர் வழங்குகின்றார்கள்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அ .இளங்கோ, வே.சதானந்தன், மெகபூப் பாஷா சேக், குமரேசன், சசி தாசன், செம்பூர் கருண், கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் நெல்லை பைந்தமிழ், இரஜகை நிலவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் கிளைக் கழகச் செயலாளர்கள் தானே பால முருகன் முலண்ட பெருமாள், பிவண்டி ஜாகிர் உசேன், அம்பர் நாத் ஜஸ்டின், முத்தமிழ் தண்டபாணி, திவாவேல் முருகன், வேலையா க.ஜீவானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சான் பாஷா, முகமது அலி, ராமலிங்கம், ஷாகுல் ஹமீது, ஜெயக்குமார், சபீர் ஷேக், கோவிந்தன், சபி, ஜெயராம், வி.வி.பெருமாள், முஷ்தாக் அலி, முத்துக்குமார், கு.தர்மலிங்கம், தானே தி.மு.க. ஜாகிர் உசேன், தமிழின நேசன், மா. பேலஸ் துரை, டார்வின், கதிரவன், நம்பி, ராஜேந்திரன், மூர்த்தி, பழனி, அப்துல் லத்திப், கி.வீரமணி, பா உதயகுமார், பொய்சர் மூர்த்தி, உ. அமரன், சி.சுடலையாண்டி, ரமேஷ், அ.அருணாச்சலம், ஜஸ்டின், ஆழ்வார், பொன்மணி, தில்லை, எம்.இ.முத்து, குலசேகரன், ஆறுமுகம், சங்கர சுப்பு, ஜி.பசுபதிநாதன், டி.செல்லத்துரை, பாண்டு, மாடசாமி, ஐயப்பன், சரவணன், பரமசிவம், விஜயகுமார், அம்பர்நாத் ராமு, உதயசூரியன், ரமேஷ் மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்களாகப் பல்வேறு கிளைக்கழகங்களைச் சார்ந்த கழக நிர்வாகிகளும் உணர்வாளர்களும் கலந்து கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் 13 வது வார்டில் உள்ள மாணவர்கள், இளைஞர்கள் , விளையாட்டு வீரர்களுக்கு 30 வகையான விளையாட்டு உபகரணங்களை மாவட்டப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம் வழங்கினார். இதில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆவின் செல்வமணி, வார்டு செயலாளர் ராஜேந்திரன் , தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் !

கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாளை நலத்திட்டங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்!

மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை, பிப். 27 - மயிலாடுதுறை மாவட்டதி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க அலுவலகம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டதிற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர்கள் பி.எம்.ஸ்ரீதர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தின் மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ் செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா அலெக்சாண்டர்,

நகரக கழகச் செயலாளர்கள் குண்டாமணி(எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், ஞான இமையநாதன், மங்கை எம்.சங்கர், செல்லசேது.ரவிக்குமார், பி.எம்அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஏ.ஆர். ராஜா, கு.வைத்தியநாதன், அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு. குமார், மலர்விழிதிருமாவளவன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன்,

என்.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா, எம்.அன்புச்செழியன், மாவட்ட அறங்காவல் குழு தலைவர் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ்.சங்காநாராயணன், நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்சத், சுபா நெடுஞ்செழியன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, காழி. கலைவாணன், பெரு வீரமணி, ஆர்.சாந்தி, தீபாசத்தியேந்திரன், இரா. செல்வராஜ், ஆர்.எஸ். ஸ்ரீதர், டி.ராஜ்குமார், இரா.தனராஜ், , பெரு.வீரமணி.காளி. தேசப்பன், க.அறிவுச்செல்வன், வி.எஸ்.பிரபாகர், மா. வைத்தியநாதன், எஸ்.எம். சமசதின் மற்றும் விஜயபாரதிகென்னடி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மார்ச் 1ஆம் தேதி பிறந்தநாள் காணும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது என்றும், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், இளைஞரணியை தொடங்கி அதன் மாநில செயலாளர், கழக துணை பொது செயலாளர், கழகப் பொருளாளர், கழகத் துணைத் தலைவர், கழகத் தலைவர் என்றும் பொது வாழ்வில் சென்னை மாநகர மேயர், சட்டமன்ற உறுப்பினர், உள்ளாட்சித் துறை அமைச்சர், துணை முதலமைச்சர் . தமிழ்நாடு முதலமைச்சர் என உழைப்பால் உயர்ந்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பிறந்த நாள் மார்ச் 1ஆம் தேதி மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கியும், பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரங்கள் வழங்கியும், பிறந்த நாளை முன்னிட்டு நலத் திட்ட உதவிகள், இரத்த தான முகாம், மருத்துவ முகாம், மரக்கன்று நடுதல், வழங்குதல், வேலை வாய்ப்பு முகாம் நடத்தியும், முதியோர் ஆதரவற்ற இல்லங்களில் உணவு மற்றும் உடை உள்ளிட்ட நல்ல திட்ட உதவிகள் வழங்கியும், தி.மு.க பொதுக்கூட்டம் மற்றும் தெரு முனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தியும் தளபதி பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடிடுவது என்றும், கழகத் தலைவர் தமிழ்நாடு முதல மைச்சர் தளபதி அவர்கள் அறிவித்துள்ள திருச்சியில் மார்ச் 9ம் தேதி நடைபெறும் கழக மாநில மாநில மாநாட்டிற்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து பெரும் அளவில் கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பிப்பது என்றும்,

கழகத் தலைவர் திராவிட மாடல் அரசர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வரும் மகளிர் உரிமைத் தொகையை பா.ஜ.க., அ.தி.மு.க.வின் சதியை முறியடித்து தேர்தல் நடைமுறை கால மாதத்திற்கு மகளிர் உரிமைத்தொகை 3 மாதத்திற்கு 3,000 மற்றும் கோடைகால சிறப்பு தொகை ரூபாய் 2,000 என ரூபாய் 5,000 த்தை 1.31 கோடி மகளிருக்கு வழங்கிய கழகத் தலைவர், தமிழ் நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட கழக சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், வெல்லும் தமிழ்ப்பெண்கள் ஸ்டாலினின் மகளிர்படை பூத்திருக்கு 10 பேர் நியமிக்கப்பட்டுள்ள ஸ்டாலின் மகளிர் படையினர் பிப்ரவரி 23 முதல் மார்ச் 8 வரை வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்துக் கூறி திராவிட மாடல் அரசு பெண்கள் நலத்திட்டங்களால் எவ்வாறு அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் வளர்ச்சிக்கும் பயன்பாட்டு வருகிறது என்று விளக்கி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முதல்வராக தொடர்ந்திடவும், நலத்திட்டங்களும் நிக்காமல் தொடர்ந்திட ஆதரவு கட்டாயம் தேவை என்று திட்டங்களை கூறி ஆட்சியின் சாதனைகள விளக்கி பிரச்சாரம் ஸ்டாலின் மகளிர் படை செய்திடுவது என்றும் ஸ்டாலின் மகளிர் படை பிரச்சாரத்திற்கு ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் செய்திடுவது என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது